**தலைப்பு 140 – சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 மே 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஒக்தோபர் 09 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட இந்நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்குகின்றன எனவும்,

(ஆ) இவ்வறிக்கையில் 1.6.4 பந்தியில் (அ(ஆ)இ), 1.6.5 பந்தியில் (அ) 1.6.7 பந்தியில் (அ)-(iii)(iv), 3.12 பந்தியில் (ஏ)(ஒ)(ஓ) மற்றும் 5(அ) பந்தியில் உள்ள பரிந்துரைகள் சம்பந்தமாக சென்ற ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் செயல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திறைசேரி அச்சுப் பதிவுகளுக்கு அமைய வைப்புக்களின் பெறுவனவுகள் ரூபா 87,180 குறைவாகவும் வைப்புக்களின் செலுத்தல்கள் ரூபா 34,125 குறைவாகவும், கணக்கில் காட்டப்பட்டிருந்தமையினால் திறைசேரிக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டுநிதி வரவு மீதி ரூபா 53,055 கூடுதலாக கணக்கில் காட்டப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய இலக்கம் 271.2019 கொண்ட அரச கணக்கு சுற்று நிருபத்தின் 3.1 பந்தியின் பிரகாரம் திறைசேரி நிதிக் கூற்றில் சம்பந்தப்பட்ட அமைச்சில் பேணப்பட்டுள்ள மீதியின் படி அமைச்சின் நிதிக் கூற்று தயாரிக்கப்பட வேண்டியமை. | ரூபா 34,125 மற்றும் ரூபா 53,055 க்கான வருமான கணக்கீட்டு வழுக்களினை திருத்தப்பட்டு திறைசேரிக்கு அனுப்பி வைத்த இலக்கம் 19.∴.12.∴.01 கொண்ட மாற்று பத்திரத்திற்காக திறைசேரியினால் 13.∴.88 கணக்கில் பெறுவனவுகளில் ஒதுக்கி விட்டு அக்கணக்கிலேயே செலுத்தல்களில் பதிவு செய்தும் ரூபா 53,055.62 க்கான பெறுமதியினை திருத்தப்படாமையினாலும் இவ் வேறுபாடு காணப்படுகின்றது. அதன்படி அமைச்சு கணக்குகளில் காட்டப்பட்டுள்ளவாறு பிழையற்றவை என அறியத் தருகின்றேன். |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு ரூபா 5,455,801 குறைவாக காட்டப்பட்ட சொத்து கிரயம் மற்றும் உபகரண மீதி திருத்தப்படாமையினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு நிதி நிலைமைக்கான கூற்றில் சொத்து கிரயம் மற்றும் உபகரண மீதியும் அவ்வளவில் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | அமைச்சினால் பேணப்படும் ஆவணங்கள் சரியாக பேணப்பட வேண்டியமை. | ஏற்றுக் கொள்கின்றேன். இதுவரையிலும் இப்பெறுமதியினை திறைசேரிக்கு அறியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதன்படி சரியாக பதியப்பட்டுள்ளது. |

### 1.6.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வருமானம் அல்லாத பெறுவனவுகள்**

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான வருமானம் அல்லாத பெறுவனவுகள் கணக்கிலிடுகையில் கீழ் காணும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | **கடன்களை மீள அறவிடப்படல்**<br>மாதாந்த கணக்கிற்கான பொழிப்பாற்றலில் ஏனைய பெறுவனவுகளின் கீழ் வீட்டுக் கடன் மீள் அறவிடப்படுதலாக ரூபா 33,952,233 பொது வருமானத்தில் வரவு வைக்கப்பட்டிருந்த போதும் 2020 மே 28 ஆந் திகதிய அபிவிருத்திப் பிரிவின் மேலதிக செயலாளரின் கடிதத்தின் படி 2019 ஆம் ஆண்டில் மொத்தக் கடன்களினை மீள் அறவிடல் ரூபா | வருமானம் அல்லாத பெறுவனவுகள் கணக்கிலிடுகை யில் பேணப்பட வேண்டிய ஏடுகள் முறையாக பராமரிக்கப்பட்டு அபிவிருத்தி பிரிவின் ஏடுகளின் படி மற்றும் கணக்கியல் பிரிவின் ஏடுகளின் படி தகவல்கள் மற்றும் கணக்குகளை ஒப்பீடு செய்து கணக்குகளை பிழையின்றி தயாரிக்கப்படு வதற்கும் | அபிவிருத்தி பிரிவுக்கு அமைவாக 2019 ஆம் ஆண்டின் மொத்த கடன் மீள் அறவிடப்பட்டமையான ரூபா 14,284,419.00 கீழுள்ளவாறு ஆகும்.<br>- முகாமைத்துவ கட்டணத்தில் அறவிடப்பட்ட வீட்டுக் கடன் தவணை<br>- தோட்ட முகாமையாளரிடம் அறவிடப்படும் வீட்டுக் கடன் தவணைப் பணம்<br>ஏனைய பெறுவனவுகள் வருமான குறியீடுகளின் கீழ் அபிவிருத்தி பிரிவின் மூலம் அறவிடப்படும் காசு |

| | | | |
|---|---|---|---|
| | 14,284,419 வாக காட்டப்பட்டிருந்தது. அதன்படி 2019 ஆம் ஆண்டில் கடன்களினை மீள அறவிடுதல் மற்றும் பொது வருமானத்தில் வரவு வைக்கப்பட்ட மீதியிடையிலான ரூபா 19,695,783 க்கான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வருமானத்தினை சரியாக பொது வருமானத்தில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | மாத்திரம் உள்ளாக்கப்படுவதில்லை என்பதனை அறியத் தருகின்றேன். |
| (ii) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதி பொது வருமானத்தில் கணக்கிலிடப்படாத 2018 ஆம் ஆண்டின்கடன் சேகரித்தலை பொது வருமானத்தில் குறைவாக வரவு வைத்தமை ரூபா 1,092,776 உம் மற்றும் 2017 ஆம் ஆண்டு கடன் சேகரித்தலை பொது வருமானத்தில் குறைவாக வரவு வைத்தல் ரூபா 12,531,657 ஆக 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு பொது வருமானத்தில் குறைவாக வரவு வைத்தல் ரூபா 13,624,433 ஆனது இதனை 2019 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் சரி செய்யப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**(ஆ) முற்பண கணக்கு மீதி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் அமைச்சின் ஏடுகளின் படி முற்பண கணக்கு இலக்கம் 12 வரவு மீதி மற்றும் திறைசேரி அச்சுப் பதிவுக்கு அமைய வரவு மீதியில் ரூபா 699,805 க்கான வேறுபாடு காணப்பட்டது. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதி அரச கணக்குக்கான சுற்று நிருபம் இலக்கம் 271∴2019 ஏற்பாடுகளுக்கு அமைவாக கணக்கு வைக்கப்பட்டு பிழையின்றி நிதிக் கூற்று தயாரிக்கப்பட வேண்டியமை. | ஏற்றுக் கொள்கின்றேன். |
| (ii) | அரச உத்தியோகத்தர்களின் முற்பண பீ கணக்கில் ஆண்டிற்கான பெறுவனவுகள் தொடர்பான அமைச்சின் ஏடுகளின் படி மற்றும் பரீட்சை மீதியின் படி மீதிகளுக்கிடையே ரூபா 704,997 க்கான வேறுபாடு காணப்பட்டது. முற்பண கட்டுப்பாட்டு கணக்கினை முறையாக தயாரிக்கப்பட்டு இல்லாமையினால் அவ்வேறுபாட்டினை இனங்கண்டு கொள்ளப்பட்டிருக்க வில்லை. ஆகவே 2019 திசெம்பர் 31 ஆந் திகதியன்று கணக்கினை சமர்ப்பிக்கும் போது நிதிப் பிரமாணம் 427(4) இன் படி வேறுபாடுகளுக்கான காரணிகளை வெவ்வேறாக காட்டப்படாமல் ரூபா 400 க்கான தேறிய வேறுபாட்டினை மாத்திரம் கணக்கின் 2.1 படிவத்தில் காட்டப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய பொது கணக்கு சுற்று நிருபம் இலக்கம் 271∴2019 ஏற்பாடுகளுக்கு அமைய கணக்கு வைக்கப்பட்டு முறையாக நிதிக் கூற்றுக்கள் தயாரிகக்ப்பட வேண்டியமை. | கணக்கில் 2:1 படிவத்தில் காட்டப்பட்டுள்ள ரூபா 400 க்கான தேறிய வேறுபாடு 2017 ஆம் ஆண்டு விசேட முற்பணம் கூடுதலாக அறவிடப்பட்டமையானது அவ்வேறுபாட்டினை 2020 ஆம் ஆண்டில் சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | 2018 மே மற்றும் யூன் மாதங்களில் அமைச்சிலிருந்து இடம்மாறிச் சென்ற இரு உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 338,754 க்கான கடன் நிலுவை 2020 மே 13 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | தாபனக் கோவை ஒஒளை அத்தியாயம் 4.5 பிரிவின் அறிவுரைக்கமைய மற்றும் தேசிய வரவு செலவுக்கான பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் 118 மற்றும் 2004 ஒக்டோபர் 11 ஆந் திகதிய சுற்று நிருபத்தின் 1.1.6 மற்றும் 1.1.7 பந்திக்கமைவாக கடன் அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | அமைச்சினைக்கு மற்றும் மாகாண கல்வி அலுவலகம் ஒன்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ள போதும் இதுவரைக்கும் சம்பந்தப்பட்ட காசினை சரிப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீண்டும் விசாரித்து அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (iv) | 2017 யூலை 22 ஆந் திகதி இறந்துபோன உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 136,550 க்கான நிலுவைக் கடன் மீதியினை அறவிடப்பட்டிருக்க வில்லை. | தாபனக் கோவை ஒஒளை அத்தியாயத்தின் 4.4, 4.5 மற்றும் 4.6 பிரிவின் அறிவுரைக்கமைய கடனினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | சம்பந்தப்பட்ட நிலுவைக் கடன் பணத்தினை இறந்துபோன உத்தியோகத்தரின் பணிக் கொடையிலிருந்து அறவிடப்படுவதற்கு விண்ணப்பம் ஒன்றினை ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்பியுள்ள போதும் இதுவரையில் அப்பணம் சரிசெய்யப்படவில்லை. |
| (v) | 2018 யூன் 15 ஆந் திகதி ஓய்வு பெற்றுச் சென்ற ஒரு உத்தியோகத்தரிட மிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 134,000 க்கான நிலுவைக் கடன் மீதி 2020 மே 26 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | தாபனக் கோவை ஒஒளை அத்தியாயத்தின் 4.2.3 மற்றும் 4.2.4 மற்றும் 4.2.5 மற்றும் 2017 திசெம்பர் 29 ஆந் திகதிய இலக்கம் 262.∵.2017 கொண்ட அரச கணக்கீட்டு பணிப்பாளர் நாயகத்தின் சுற்று நிருபத்திற்கும் அமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இந்த ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் சம்பந்தப்பட்ட நிலுவைக் கடன் பணத்தினை அமைச்சின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டிருப்பதுடன் தவறுதலாக அப்பணம் அரசின் வருமானமாக கருதப்பட்டு கணக்கிலிடப்பட்டிருப்பதுட ன் இவ்வாண்டில் அத்தவறினை சரிசெய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (vi) | பணியினை விட்டுச் சென்ற மூன்று உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 326,582 க்கான கடன் மீதியினுள் 5 வருடங்களைக் கடந்த ரூபா 107,896 உம் மற்றும் 6 வருடங்கள் கடந்த ரூபா 2,250 க்கான கடன் மீதியும் தொடர்பாக கணக்காய்வு தினமான 2020 மே 26 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | தாபனக் கோவை ஒஓளை அத்தியாயத்தின் 4.5 பிரிவின் அறிவுரைக்கமைய கடனினை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | பணியினை விட்டுச் சென்ற ஒரு உத்தியோகத்தர்களின் இடர்கடன் கோவை மற்றும் தனியார் கோவை இந்த அமைச்சில் இல்லை. கால்நடை வள அமைச்சில் விசாரிப்பதற்கான நடவடிக்கை எடுப்பேன். ரூபா 216,436 அறவிடப்பட வேண்டிய உத்தியோகத்தருக்கு இறுதி அறிவித்தலாக 2019.10.29 ஆந் திகதி கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |

## 1.6.4 ஆவணங்கள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சின் கீழ் காணும் சில ஆவணங்கள் பேணப்படாதிருந்ததுடன் சில ஆவணங்கள் முறையாகவும் இற்றைப்படுத்தப்படாமலும் பேணப்பட்டிருந்தமை மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிணை ஆவணம் | | |
| | நிதிப்பிரமாணங்கள் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய அலுவலர்கள் மற்றும் சேவையாளர்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய பிணை ஆவணம் ஒன்று தயார் செய்யப்பட்டு இருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் பிணை ஆவணம் ஒன்று பேணப்படுதல் வேண்டும். | பிணை ஆவணம் ஒன்றினை பேணிச் செல்வதற்கான தேவைப்பாட்டினை குறித்துக் கொண்டேன். |
| (ஆ) | பொறுப்புக்கள் தொடர்பான ஆவணம் | | |
| | நிதிப்பிரமாணங்கள் 214 மற்றும் 447(4) மற்றும் (5) பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான ஆவணம் ஒன்று இற்றைப் படுத்தப்பட்டு பேணிச் செல்லப்படவில்லை. | நிதிப்பிரமாணங்கள் 214 இன் பிரகாரம் பொறுப்புக்கள் தொடர்பான ஆவணம் ஒன்றில் குறிப்பிடப்படுதல் வேண்டியமை. | சகல பொறுப்புக்களும் கணனி வேலைத்திட்டத்தினுள் பிழையின்றி உட்படுத்தப்படுவதுடன் அது தொடர்பான கோவையினை இம்மாதத்தினுள் தாபிப்பேன். |

(இ) கடன் அறவிடப்படுவதற்கான நிதியத்திற்காக புத்தகங்களை பேணிக் கொள்ளல்

---

| | | | |
|---|---|---|---|
| | நிதிப்பிரமாணங்கள் 501(இ) மற்றும் 502(ஆ) பிரகாரம் சுழலும் நிதியின் கீழ் மற்றும் கடன் அடிப்படையில் வீடுகள் வழங்கப்படும் போது பெற்றுக் கொடுக்கப்படுகின்ற கடன் நிதி உரிமையாளரால் சம்பந்தமாக விடப்படுகின்ற பங்குக் கொடுப்பனவுகளை கணக்கீடு செய்தல் மற்றும் விதிக்கப்படும் நிபந்தனைகளின் பிரகாரம் முழு நிதித் தொகையையும் மீள அறவீடு செய்து கொள்வதற்கு உறுதிப்படுத்தக்கூடிய வகையில் புத்தகங்கள் பேணப்பட்டு இருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் புத்தகங்கள் பேணப்பட்டு கடன் நிதியினை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியமை. | கடன் அறவீடு தொடர்பான தகவல்கள் அமைச்சில் இல்லை என்பதுடன் வெளிக்கள அலுவலர்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் தகவல்களுக்கு அமைய வேலைத்திட்டத்தில் எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஈ) | நிதி அமைச்சினால் 2017 பெப்ரவரி மாதம் விடுக்கப்பட்டுள்ள திட்டங்கள் மற்றும் ஒப்பந்த முகாமைத்துவத்திற்கான வழிகாட்டலில் நிதி வழங்கும் முகவர் நிலையத்தினால் பேணிச் செல்லப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் படிவங்கள் தொடர்பாக கட்டம் இலக்கம் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளது போல ஆவணங்கள் மற்றும் பதிவுகள் அமைச்சினால் பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | ஒப்பந்தங்களின் கீழ் செய்யப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்தப்பட வேண்டிய மீதிகள் மற்றும் அறவீடுகளை இனங்கண்டு கொள்ளக் கூடியவாறு ஆவணங்கள் பராமரிக்கப்பட வேண்டியமை. | 2020 ஆம் ஆண்டு முதல் மேற்கண்ட படிவங்களை பேணுவதற்கான நடவடிக்கை மேற்கொள்வேன். |

## 1.6.5 கணக்காய்வு சான்றுகள் இல்லாமை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கட்டிட சேவை வழங்கல் மற்றும் கட்டுமான திட்டங்களின் கட்டமைப்பினை பரீட்சித்தல் தொடர்பாக ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்கள் 702(3) இன் பிரகாரம் ஒப்பந்தங்கள் தொடர்பாக உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்படல் வேண்டியமை. | சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்கள் அமைச்சின் நிர்வாக பிரிவு பொறுப்பில் உள்ளது. தேவை ஏற்படின் பெற்றுக் கொடுக்க முடியும். |
| (ஆ) | பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் மூலம் வீடமைப்புத் திட்ட பயனாளிகளுக்கு வழங்கப்படும் கடன் தவணைப் பணத்திற்காக அவர்களால் மேற்கொள்ளப்படும் பங்குக் கொடுப்பனவுகள் மற்றும் வட்டியினை அமைச்சிற்கு மீளச் செலுத்தப்பட வேண்டியதுடன் செலுத்தப்படாது இருக்கும் பணத்தினையும் அதற்குப் பதிலாக கழித்துக் கொள்ளப்பட்ட முகாமைத்துவ கட்டண அளவினை பற்றியும் விரிவான ஒரு அறிக்கையும் பற்றியும் விரிவான ஒரு அறிக்கையும் மற்றும் அந்நிதியினை மீள அறவிடுதல் தொடர்பாக சகல கொடுக்கல் வாங்கல்களையும் பதிவு செய்யப்பட்டுள்ள ஏடுகள் மற்றும் ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஒவ்வொரு வீடமைப்பு திட்டத்தின் கீழ் மற்றும் ஒவ்வொரு ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் அறவிடல்கள் இனங்கண்டு கொள்ளக் கூடியவாறு ஆவணங்கள் பராமரிக்கப்பட வேண்டியமை. | வீட்டுக் கடன்கள் மீள அறவிடப்படுவதற்கான விபரங்கள் அபிவிருத்திப் பிரிவு பொறுப்பில் உள்ளதுடன் சம்பந்தப்பட்ட விபரங்கள் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். 2019 ஆம் ஆண்டினுள் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய முகாமைத்துவக் கட்டணத்திற்கு ரூபா 03 மில்லியன் அமைச்சுக்கு கொடுக்கப்படாத கடன் தவணைப் பணத்திற்காக கழிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 03 மூலதன செலவின விடயங்களின் கீழ் நிர்மாண ஒப்பந்தத்திற்காக 2019 ஆம் ஆண்டினுள் ரூபா 2,800,000,000 க்கான ஒதுக்கீடு மீது ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணைப்பு தொடர்பான உடன்படிக்கை மற்றும் செய்யப்படுகின்ற வேலை தொடர்பாக மற்றும் செலுத்தப்பட வேண்டிய பணம் தொடர்பாக விபரமான அட்டவணையாவது கணக்காய்வுக்கு முன் வைக்கவில்லை. | ஒவ்வொரு வீடமைப்புத் திட்டத்தின் கீழ் மற்றும் ஒவ்வொரு ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் மற்றும் அறவிடுதல்கள் இனங்கண்டு கொள்ளக் கூடியவாறு ஆவணங்கள் பராமரிக்கப்பட வேண்டியமை. | சம்பந்தப்பட்ட விபரங்கள் அடங்கிய ஊசு ஆவணமொன்று தற்போது பேணப்பட்டு வருவதுடன் அதிலுள்ள குறைபாடுகளை சரிசெய்து எதிர்காலத்தில் ஒப்பந்த ஆவணமொன்றினை பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பேன். நிதி மற்றும் பௌதீக முன்னேற்ற அறிக்கையினை பூரணப்படுத்தி சமர்ப்பிப்பதற்கு எதிர்காலத்தில் ஏற்பாடு செய்வேன். |

### 1.6.6 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுரை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக செயற்திறன் மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றினை தயாரித்து பேணிச் செல்வதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும் என்பதுடன் அந்த முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன்படி முறைமையினை செயற்திறன் மிக்க வகையில் நடாத்திச் செல்வதற்கு அவசியமான மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதுடன் அந்த மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டி இருந்த போதிலும் அது போன்ற | 2018 இலக்கம் 10 கொண்ட தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் அமைய செயற்பட வேண்டியமை. | விடை அளிக்கப்படவில்லை. |

மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன என்பதற்கான கூற்றுக்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை.

**1.6.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டம், ஒழுங்கு மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்கா சந்தர்ப்பங்கள் கீழே ஒப்பீடு செய்து காட்டப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 214 | அதிகாரம் அளிக்கப்படும் அலுவலகர் போன்றே சான்றுரை வழங்கும் அலுவலகர்களால் பொறுப்புக்களுக்கான ஆவணங்கள் நாள் தோறும் பரீட்சிக்கப்பட வேண்டி இருந்த போதிலும், அவ்வாறு பரீட்சிக்கப்படாமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | சம்பந்தப்பட்ட நிதிப் பிரமாணத்திற்கு அமைய செயற்பட வேண்டியமை. | எதிர்காலத்தில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய பொறுப்புக்களுக்கான ஆவணம் ஒன்றின் பேணுவதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (ii) | நிதிப்பிரமாணம் 388 | ஒப்பந்தக்காரர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக கணக்கீட்டு பிரிவினால் பெருந்தோட்ட அபிவிருத்தி நிதியம் பெயரில் எழுதப்படும் காசோலைகள் அவர்களிடம் கையளிப்பதற்கு பதிலாக அபிவிருத்தி பிரிவின் உத்தியோகத்தர்களிடம் பெற்றுக் கொடுக்கப்பட்டு பிறகு அவர்கள் மூலம் பெருந்தோட்ட அபிவிருத்தி நிதியத்திற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள | சம்பந்தப்பட்ட நிதிப் பிரமாணத்திற்கு அமைய செயற்பட வேண்டியமை. | விடை அளிக்கப் பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும், அவ்வாறு காசோலைகளை கையளிக்கும் போது பிரமாணத்தின் படி ஆவணம் ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | நிதிப்பிரமாணம் 570 மற்றும் நிதிப்பிரமாணம் 571(1) | விஞ்சிய சகல வைப்புக்குமாக ஒவ்வொரு அரையாண்டு இறுதியிலும் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட வேண்டி இருந்த போதிலும்அவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட நிதிப் பிரமாணத்திற்கு அமைய செயற்பட வேண்டியமை. | இத்தகவல் அமைச்சின் அபிவிருத்திப் பிரிவினால் அறிக்கையிடப்பட்டது. |
| (iv) | நிதிப்பிரமாணம் 571(3) | இரண்டு பொது வைப்புக் கணக்கில் 2 வருடங்கள் விஞ்சிய வைப்பு சந்தர்ப்பங்கள் 16 இன் மொத்த பெறுமதியான ரூபா 56,355,960 தொடர்பாக நிதிப் பிரமாணப் படி செயல்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட நிதிப் பிரமாணத்திற்கு அமைய செயற்பட வேண்டியமை. | மிகுதிப் பணம் தொடர்பாக எதிர்காலத்தில் நி.பி 571 இன் பிரகாரம் செயல்படுவேன். கணக்கில் உள்ள இரண்டு வருடங்களை விஞ்சிய பணத்தினை திட்டத்தினை முடிக்கப்பட்டு 06 மாதத்திற்கு பின்னர் பணத்தினை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (v) | நிதிப்பிரமாணம் 702(3) | அமைச்சினால் கைச்சாத்திடப்பட்ட சகல ஒப்பந்தங்களினதும் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | சம்பந்தப்பட்ட நிதிப் பிரமாணத்திற்கு அமைய செயல்பட வேண்டியமை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | திறைசேரி செயலாளரின் இலக்கம் 3/2015 மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய பொது நிதி சுற்று நிருபத்தின் (இ) பந்தி மற்றும் | 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட மாதிரி பரீட்சையின் படி 44 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்ட முற்பணம் 12 நாள் முதல் 143 நாள் வரையில் ரூபா 2,375 முதல் ரூபா 91,990 வரையிலான | சம்பந்தப்பட்ட நிதிப் பிரமாணத்திற்கு அமைய செயல்பட வேண்டியமை. | முற்பணம் பெற்றுக் கொள்ளப்பட்ட தேவையினை தொடர்பான செலவினம் அதற்கு முன்பு இருந்தே செலவு செய்யப் பட்டிருந்தமையால் |

| | | |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(5) | மொத்தம் ரூபா 1,047,150 செலவிடப்படாது கையிருப்பில் வைக்கப்பட்டு காசு மூலம் சரிப்படுத்தப்பட்டிருந்தது. | அவையினை மீள் நிறைவு செய்தல் மற்றும் ஏனைய பணிகள் இருந்தான படியினால் அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட பணம் மீள சரிசெய்யப்பட்டது. |

**1.6.8 முறைசாரா கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) அதிகார தத்துவமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

அமைச்சினால் அதிகார தத்துவமின்றி பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியால் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் பல வருடங்களாக அமைச்சு சார்பாக கடன் அறவிடப்பட்டதுடன் அதன் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றின் படி 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு அமைச்சுக்கு செலுத்தப்பட இருந்த மீதி ரூபா 31.02 மில்லியன் ஆக இருந்தது. பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டி இருந்த முகாமைத்துவ கட்டணத்தில் ரூபா 2.97 மில்லியன் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருப்பதனால் அதன் மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்ட நிதியினை தவிர்த்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் இருந்த மீதியில் மட்டும் மேலும் பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி நிதியத்திலிருந்து | பொது நிதியினை வெளித்தரப்பினரிடம் கையளிக்கப்படாது உரிய தினத்தில் வரவு வைக்கக் கூடியவாறு அவசியமான முறைமையினை மற்றும் கட்டுப்பாட்டு விதிகள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | விடை அளிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சுக்கு கிடைக்க வேண்டிய மற்றும் பொது வருமானத்தில் வரவு வைக்கப்பட வேண்டிய வருமானம் ரூபா 28.05 மில்லியன் ஆகும். | | |
| (ii) | முற்பணம் பெற்றுக் கொள்வதற்கு உத்தேச காரியத்திற்காக எழுத்து மூல வேலைத் திட்டமொன்றினை அங்கீகரித்துக் கொண்டதன் பின்னர் முற்பணம் பெற்றுக் கொடுக்க வேண்டி இருந்த போதிலும், 07 சந்தர்ப்பங்களில் 5 நபர்களினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 7,000 உம் ரூபா 75,250 உம் இடையிலான மொத்தம் ரூபா 184,700 ஆன முழு நிதியினையும் (செலவிடப்படாது) 11 நாள் முதல் 14 நாள் இடையிலான கால வீச்சினுள் கையிருப்பில் வைத்துக் கொண்டதன் பின்னர் சரிப்படுத்தப்பட்டிருந்தது. | எழுத்து மூல வேலைத் திட்டமொன்றினை அங்கீகரித்துக் கொண்டதன் பின்னர் மாத்திரம் முற்பணம் பெற்றுக் கொடுக்க வேண்டியமை. | விடையளிக்கப்படவில்லை. |

**(ஆ) அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

முறையான அங்கீகாரமின்றி பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்திற்கு கட்டணமொன்றினை செலுத்துவதன் மூலம் முகாமைத்துவ உதவியினை பெற்றுக் கொள்வதற்கு 2006 நவம்பர் 30 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. ஆயினும், அவ் அதிகாரத்திற்கு மற்றும் பெறுகை செயற்பாட்டிற்கு | நடைமுறை சட்ட ஒழுங்குகளுக்கு அமைவாக மற்றும் அரச பெறுகை வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கவனத்திற் கொண்டு பொது மக்களுக்கு | பதில் அளிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| முரணாக அமைச்சினால் செயல்படுத்தப்படும் வீடமைப்புத் திட்டத்தில் ஒப்பந்த மேற்பார்வைக்கு மேலதிகமாக ஒப்பந்தக்காரர்களை தெரிவு செய்தல், ஒப்பந்தக்காரர்களுக:கு கொடுப்பனவு வழங்கல், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினால் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.12.1(அ) வழிகாட்டலுக்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. மேலும் திட்டத்தில் ஒப்பந்தக்காரர்களின் பெயரில் செலுத்தப்பட வேண்டிய காசோலைகள் முதலில் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பெயரில் விடுவிக்கப்பட்டு இருந்ததுடன் அவ்வாறு செலுத்தப்படுவதற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட அனுமதியினையும் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. அதற்கு மேலாக அமைச்சு மற்றும் இந்நிறுவனத்திற்கிடையில் சம்பந்தப்பட்ட அலுவலுக்கான ஒப்பந்தமாவது இருக்கவில்லை. | ஆகக்கூடிய நன்மை ஏற்படும் வகையிலும் பொது நிதியினை உச்ச கட்ட வினைத்திறனாக மற்றும் ஊடுருவி தெரியக்கூடியதாக பாவனை செய்தல் வேண்டும். | |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஆண்டின் தேறிய ஒதுக்கீடு ரூபா 4,667,859,000 ஆக இருந்ததுடன் அமைச்சின் கட்டுநிதி திட்டத்தின் படி ஆண்டினுள் விண்ணப்பிக்கப்பட வேண்டிய மொத்த கட்டுநிதி ரூபா 3,797,022,000 ஆன போதிலும், அந்தக் கட்டுநிதி திட்டத்தினையும் விஞ்சி மொத்தமாக ரூபா 3,903,315,000 க்கான கட்டுநிதி ஆண்டினுள் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது.<br>ஆயினும், ஆண்டினுள் கட்டுநிதி | | மாதாந்தம் விண்ணப்பிக்கின்ற படி கட்டுநிதி கிடைக்காது போனதால் மீதியுள்ள ஒதுக்கீட்டு செலவினத் திட்டம் மற்றும் முன்னைய மாதங்களில் குறைவாக கிடைத்த கட்டுநிதி அளவினை கவனத்திற் கொண்டு ஒவ்வொரு மாதமும் விண்ணப்பிக் கப்பட்டிருப்பதால் |

| | | |
|---|---|---|
| பெறுவனவுகள் ரூபா 1,479,160,000 ஆனதுடன் அது மொத்த கட்டுநிதிக் கேள்வியின் நூற்றுக்கு 32 ஆக இருந்தது. | | திட்டத்திற்கு கூடுதலாக கட்டுநிதி கோரப்பட்டுள்ளது. |

**2.2 செலவின முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) அமைச்சின் செயலாளரை விளிக்கப்பட்ட தேசிய வரவு செலவுக்கான பணிப்பாளர் நாயகத்தின் இலக்கம் BD/EE140/1/4 மற்றும் 2019 யூலை 17 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் செலவின விடயம் இலக்கம் 140-02-04-05-2506(17) கீழ் வருடாந்த ஒதுக்கீடுகளிலிருந்து ரூபா 15 மில்லியன் ஒதுக்கி வைக்கும் படி அறியக் கொடுத்திருந்த போதிலும், அதற்கு முரணாக ரூபா 4.9 மில்லியன் மட்டும் சேமித்து வைக்கப்பட்டு இருந்தமை அவதானிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியமை. | 140-02-04-05-2506(17) செலவின விடயத்தின் கீழ் பெறப்பட்ட சன்மான வீடுகளுக்கு இணங்க தேவையான உட்கட்டமைப்பினை கட்டியெழுப்புவதற்காக அவ் ஒதுக்கீட்டினை செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன்படி 56 அளவு மட்டும் சேமிக்கக் கூடியதாக இருந்தது. |
| (ஆ) 11 மூலதன செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,811,550,000 க்கான தேறிய ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 1,179,103,828 செலவிடப்பட்டு நூற்றுக்கு 25 முதல் 99 வரையிலான வீச்சினுள் ரூபா 1,632,446,173 க்கான சேமிப்பு அவதானிக்கப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியமை. | தேசிய வரவு செவு திணைக்களத்தின் சுற்று நிருபம் 04.∴2019 மற்றும் அறிவுரையின் படி பெறுகை செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு மற்றும் நிறுத்துவதற்கு நேர்ந்தமையினால் வருட இறுதியில் திட்டமிடப்பட்டிருந்த பெறுகைகளை நடத்த முடியாது போயிற்று |
| (இ) 140-2-4-2-2506 மற்றும் 140-2-4-3-2506 ஆகிய மூலதன செலவின விடயங்களுக்காக மொத்தம் ரூபா 200,000,000 மற்றும் மீள்நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டு 2019 யூலை 01 | நிதிப்பிரமாணம் 50 பிரகாரம் சரியான செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியமை. | முன்னர் குறிப்பிட்டது போல் கட்டுநிதி கிடைக்காமையினால் முடிக்கப்பட்ட பணிகளுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ள |

| | | | |
|---|---|---|---|
| | ஆந் திகதி நிறைவேற்றப்பட்டிருந்தது. ஆயினும், வருட இறுதியில் அவ்வாறு நிறைவேற்றப்பட்ட மீள்நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டினையும் விஞ்சி ரூபா 1,559,991,875 மீதப்படுத்தப்பட்டிருந்தது. | | முடியாமையினால் செலவின விடயங்களில் ஒதுக்கீடு மீதப்பட்டிருக்கிறது. |
| (ஈ) | 140-1-2-1-2201 ஆகிய மூலதன செலவின விடயங்களுக்காக ரூபா 3,000,000 மற்றும் ரூபா 1,500,000 க்கான மீள்நிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடுகள் 2019 பெப்ரவரி 14 மற்றும் 2019 செப்டம்பர் 20 அந் திகதி நிறைவேற்றப்பட்டன. அதில் நூற்றுக்கு 33.3 மாத்திரம் அதாவது ரூபா 1,500,000 மாத்திரம் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை. | ஒதுக்கிக் கொடுக்கப்பட்ட ஒதுக்கீடுகளுக்கு இணங்களாக கட்டுநிதி திட்டமிட்டபடி கிடைக்காமையினால் திட்டமிட்டபடி செலவு செய்வதற்கு முடியாது போனமையால் ஒதுக்கீடுகள் மீதப்படுத்தப்பட்டிருந்தன. |

## 2.3 பொறுப்புக்களையும் இணக்கங்களையும் மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக் குறிப்பு இலக்கம் (மை) இணக்கப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்றில் இணக்கப்பாடுகள், இணக்கப்பாடுகளின் விளைவு, பொறுப்புக்கள், மற்றும் பொறுப்புக்களுக்கான மதிப்பீடுகளை உறுதிப்படுத்தலுக்கான கணக்காய்வுக்கு தேவையான தகவல்கள் மற்றும் ஆவணங்கள் முன்வைக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணப் படி பொறுப்புக்கான ஆவணம் ஒன்று பேணப்பட்டு கொண்டு ஏனைய பிரிவுகளுடன் காலத்திற்குக் காலம் செயல்பட்டு நிதியாண்டினுள் பொறுப்புக்களை முறையாக இனங்காண வேண்டியதுடன் தகவல்களை கணக்காய்வுக்கு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியமை. | தவறுதல் நேர்ந்துள்ளது. திருத்திக் கொள்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொதுக் கணக்கீட்டு சுற்றுநிருப இலக்கம் 255/2017 இன் படி சகல பொறுப்புக்கள், பொறுப்புக்களாக ஆவணப்படுத்தப்பட வேண்டி இருந்த போதிலும், அவ்வாறு ஆவணப்படுத்தப்படாத, ஆயினும், 2020 பெப்ரவரி 29 ஆந் திகதியாகும் போது பணம் செலுத்தப்பட்டிருந்த வழங்கள் மற்றும் சேவைகளுடன் தொடர்பற்ற 03 செலவின விடயங்கள் வழங்களும் சேவைகளும் தொடர்பான 03 செலவின விடயங்களின் கீழான மொத்த பொறுப்புக்களுக்கான பெறுமதி முறையே ரூபா 613,417 மற்றும் ரூபா 1,086,080 நிதிக்கூற்று குறிப்பு இலக்கம் (iii) கீழ் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 94(1) இன் படி பொறுப்புக்கான ஆவணம் ஒன்றினை இற்றைப்படுத்தி பேணுவதற்கு தேவையான முறைமை மற்றும் கட்டுப்பாட்டு விதிகள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | ஏற்றுக் கொள்கின்றேன். ‘‘சிகாஸ்’’ நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் இக்காரியம் மேற்கொள்ளப்படுவதுடன் வழங்கும் போது அதன் மீது சம்பந்தப்பட்ட பொறுப்புக்கான இலக்கத்தினை குறிக்கப்பட்டு சான்றுரை இடப்படும். எதிர் வருடங்களில் குறைபாடுகளை திருத்துவதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (இ) | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய 255/2017 ஆம் இலக்க பொதுக் கணக்கீட்டு சுற்றறிக்கையின் படி 2018 ஆம் ஆண்டுக்கான அலுவலுகளுக்காக 2019 ஆம் ஆண்டில் கொடுப்பனவுகள் மேற்கொள்வதற்கு 2018 ஆம் ஆண்டில் நிதிக் கூற்றில் இணக்கப்பாடுகள் என காட்டப்பட வேண்டி இருந்த போதிலும், 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றின் படி பொறுப்புக்கள் மற்றும் இணக்கப்பாடுகள் எதுவும் காட்டப்பட்டிருக்கவில்லை. ஆயினும், 2018 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கை மற்றும் 2019 ஒக்தோபர் 31 வரையிலான | நிதிப்பிரமாணம் 94(1) இக்கு அமைவாக பொறுப்புக்களுக்கான ஆவணம் ஒன்றினை இற்றைப்படுத்தப்பட்டு பேணுவதற்கு தேவையான முறைமை மற்றும் கட்டுப்பாட்டு விதிகள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | 2019 ஆம் வருடம் இக்குறைபாடுகளை குறைத்துக் கொண்டதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் அபிவிருத்திப் பிரிவுடன் கலந்துரையாடி சரியான தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

முன்னேற்ற அறிக்கையின் படி 2018 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் அவ் வருடத்தில் முடிக்கப்படாது கொண்டுவரப்பட்ட 1566 வீட்டு அலகுகள் இடையே 1489 வீடுகளுக்காக ரூபா 280.578 மில்லியன் மேற்படி சுற்று நிருபத்திற்கு முரணாக 2019 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பொறுப்புக்களை மேற்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 பெருந்தோட்ட வலயங்களின் கீழ் 2019 ஆம் ஆண்டினுள் நிர்மாணிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள கூட்டுப் பெறுமதி ரூபா 551 மில்லியனுக்கான 551 வீடுகள் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியான போதிலும் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டவாறு இருக்கவில்லை. | திட்டமிட்டபடி வீடுகளை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | விடை அளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | சுழலும் நிதியத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்ட கடன் மீதிகளிலிருந்து 2016 ஆகஸ்ட் மாதத்தில் கடன் பெற்றுக் கொடுக்கப்பட்ட 6 பயன் பெறுநர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் தவணைப் பணம் 4 முதல் 29 வரையிலான மொத்தம் ரூபா 332,013 உம், 2017 ஆம் வருடம் பெற்றுக் கொடுக்கப்பட்ட 5 பயன்பெறுநர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 2 | கடன் கொடுக்கப்பட்ட நபர்களை பற்றி பின் விசாரணை செய்யப்பட்டு கடனினை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | 2019.12.31 ஆந் திகதிய இலங்கை வங்கி கூற்றுக்கு அமைவாக 2 நிலுவை தவணைக்கு மேல் செலுத்தாது என பயன்பெறுநர்களை பெருந்தோட்ட பொதுசன தொடர்பு உத்தியோகத்தர் மூலம் பின் விசாரணை செய்யும் படி அறிவித்துள்ள போதிலும், கொறோனா தொற்று நிலைமை காரணமாக மீள் விசாரணை செய்வது |

| | | | |
|---|---|---|---|
| | முதல் 19 வரையிலான தவணைப் பணம் மொத்தம் ரூபா 120,297 உம், 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு அறவிடப்படாது நிலுவையாக இருந்தன. 2016 ஆம் வருடம் கடன் பெறப்பட்டு செலுத்தாது உள்ள 03 பயன் பெறுநர்களும் சம்பந்தப்பட்ட சுய தொழிலில் ஈடுபடாதமை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதிகள் பரிசோதனையின் போது தெரியவந்துள்ளது. அது சம்பந்தமாக 2020 பெப்ரவரி 07 வரையிலும் அமைச்சு போதிய நடவடிக்கை எடுக்கவில்லை. | | பிரச்சினைக்குரிய விடயமாக உள்ளது என்பதனை அறியத் தருகின்றேன். |

## 3.2 எதிர்பார்த்த அடைவினை பெற்றுக்கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017, 2018 மற்றும் 2019 வருடங்களில் ஆரம்பிக்கப்பட்ட மற்றும் அத்திகதியிலிருந்து 06 மாதங்களினுள் முடிக்கப்பட வேண்டிய வீடமைப்புத் திட்ட சந்தர்ப்பங்கள் முறையாக 58.21 மற்றும் 18 சம்பந்தப்பட்ட கால கட்டத்தினுள் முடிக்கப்படாது இருந்ததுடன் அதன் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 2,128,171,041 இல் ரூபா 1,399,647,490 2019 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது செலவிடப்பட்டு நூற்றுக்கு 66 ஆன நாணய முன்னேற்றத்தினை மாத்திரம் பெற்றுக் | உரிய கால கட்டத்தினுள் திட்டங்களை மேற்கொள்ளக் கூடியதாக திட்டங்களை முறையாக தயாரிப்பதற்கு தேவையான முறைமை மற்றும் கட்டுப்பாட்டு விதி முறைகளை அறிமுகப்படுத்தவும், நிதியினை வினைத்திறனாகவும் மற்றும் பயனுள்ளதாக இடுவதற்கும் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டியமை. | விடை அளிக்கப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளப்பட்டிருந்தது. அந்த 97 திட்டத்தினுள் உள்ளான 2117 வீட்டு நிர்மாணப் பணியின் பௌதீக முன்னேற்ற (முன்னேற்ற அறிக்கையின் படி) பரிசோதனையின் போது அதில் 846 வீடுகள் மாதிதரம் முடிக்கப்பட்டிருந்தன. அதன்படி திட்டங்களை மேற்கொள்வதில் ஏற்பட்ட தாமதம் 2 வருடங்களை விஞ்சி இருந்தமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | மண்சரிவில் இடம்பெயர்ந்த நபர்களுக்காக ஐலா தோட்டப்பிரிவில் 47 வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2018 ஆம் ஆண்டில் ரூபா 47,000,000 அனுமதிக்கப்பட்டிருந்தது. அந்த வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2018 பெப்ரவரி 12 ஆந் திகதி பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினால் ஐலா தோட்ட ஊழியர் கூட்டுறவு சங்கத்துடன் ஒரு வீட்டுக்கு தலா ரூபா 950,000 க்கான உடன்படிக்கையினை ஏற்படுத்திக் கொண்டது. உடன்படிக்கையின் படி அவ்வீட்டுத் திட்டத்தினை 2018 செப்தெம்பர் 12 அந் திகதியாகும் போது முடிக்கப்பட வேண்டி இருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2019 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போதும் வீட்டு நிர்மாணப் பணியில் முதற் கட்டம் வரையில் மட்டும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பொதுமக்களுக்கான சேவைகளை மேற்கொள்ளும் பொழுது முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டிய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து உரிய கால கட்டத்தினுள் திட்டங்களை மேற்கொள்வதற்கு கூடிய வகையில் திட்டங்கள் முறையாக தயாரிக்கப்பட வேண்டியமை. | விடை அளிக்கப்படவில்லை. |

## 3.3 எதிர்பார்த்த நன்மைகளினை பெற்றுக் கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 30 ஆந் திகதி பௌதீக பரிசோதனையின் போது ஹற்றன் பிரதேசத்தில் ரூபா 140,359,085 பெறுமதி வாய்ந்த 153 வீடுகள் மற்றும் நுவரெலியா பிரசேதத்தில் ரூபா 108,750,000 பெறுமதி வாய்ந்த 128 வீடுகளை கையளித்ததன் பின்னர் ஹற்றன் பிரதேசத்தில் 15 மற்றும் 1 மாதம் இடையிலான காலமும் மற்றும் நுவரெலியா பிரதேசத்தில் 3 வருட மற்றும் 03 மாத இடையிலான காலமும் கடந்து போய் இருந்தது. பயன்பெறுநர் வந்திருக்கவில்லை. அதன் பிரகாரம் வீடுகளைப் பெற்றுக் கொடுத்ததன் பின்பு அமைச்சின் அலுவலகர் மூலம் இத்திட்டத்தினை மேற்பார்வை செய்யாததன் மூலம் மேற்கொள்ளப்பட்ட செலவினம் சம்பந்தமாக பயன் மக்களுக்கு கிடைக்கப் பெற்று இல்லாததுடன் நிதி வீணடிக்கப்பட்டுள்ளது. | பொது நிதி வீணடிக்கப்படாமலும் மக்களுக்கு நியாயத்தினை நிலைநாட்டலும் செலவு செய்யப்பட வேண்டியமை. | விடை அளிக்கப்படவில்லை. |
| (ஆ) | உள்ளக கணக்காய்வு பிரிவின் பரிசோதித்தலின் படி 35 வீட்டுத் திட்டத்தின் 612 வீட்டு அளவினையின் நிர்மாணப் பணிகள் முடிக்கப்பட்டு இரண்டு வருட காலம் கடந்து போய் இருப்பினும் அவ்வீடுகளை பயன்பெறுநர்களுக்கு கையளிக்கப்பட்டிருக்க வில்லை. | வீடுகளை தரத்திற்கு அமைய நிர்மாணிக்கப்பட்டு பயன் பெறுநர்களிடம் கையளிக்கப்பட வேண்டியமை. | விடை அளிக்கப்படவில்லை. |

**3.4 திட்டங்களை முடிக்கப்படாது விட்டு விடுதல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 192,635,000 க்கான ஹற்றன் மாவட்டத்தில் 10 திட்டங்களுக்கான காணியினை தெரிவு செய்வதில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலை காரணமாக அத்திட்டங்களை ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | திட்டங்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் சாத்தியக் கூற்றுக்கள் மீது கவனம் செலுத்தி நிர்மாணப் பணிகளுக்கு ஏற்ற காணிகளை இனங்காண்பதற்குத் தேவையான முறைமை மற்றும் கட்டுப்பாட்டு விதிமுறையினை அறிமுகப்படுத்த வேண்டியமை. | விடை அளிக்கப்படவில்லை. |

**3.5 நிதியினை விடுவிக்கப்பட்டிருந்தும் முன்னேற்றம் பெறப்படாத திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வு பிரிவின் பரிசோதனைக்கு அமைய 2017 ஆம் ஆண்டினுள் முடிக்கப்பட வேண்டிய ரூபா 14,181,329 பெறுமதியான விடு அல்லாத ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள் 25 மற்றும் 2018 ஆம் ஆண்டினுள் முடிக்கப்பட வேண்டிய ரூபா 12,262,097 ஆன 03 திட்டங்களும் வேலை முடிக்கப்பட வேண்டிய 2 வருடங்கள் தாண்டிவிட்ட 8 திட்டங்கள் தொடர்பாக செலுத்தப்பட்ட முற்பணமான ரூபா 911,664 இதுவரையிலும் அறவிடப்படாது உள்ளதுடன் ரூபா 190,349 முற்பணம் செலுத்திய திட்டமொன்று 2 வருடங்களுக்குப் பின்னர் முதலாம் கட்டத்தின் கீழ் முதல் உரிமையினை | முறையான மேற்பார்வையின் கீழ் முற்பணம் செலுத்தப்பட வேண்டியமை. | விடை அளிக்கப்பட்டிருக்கவில்லை. |

கோரப்பட்டிருந்தது. ஏனைய 15 அபிவிருத்தி திட்டங்கள் முடிக்கப்பட வேண்டிய நாட்கள் தாண்டி ஒரு வருடம் கழிந்த பிறகு முடிக்கப்பட்டிருந்ததுடன் 4 திட்டங்களுக்காக செலுத்தப்பட்டிருந்த முற்பணமான ரூபா 740,358 ஆனது 04 மாதங்களுக்குப் பிறகு மீண்டும் சரி செய்யப்பட்டிருந்தது. இதன்படி பொது நிதியினை பயனுள்ள வகையில் பாவனை செய்யாமை அவதானிக்கப்பட்டது.

## 3.6 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் அடங்கிய நம்பகமற்ற தகவல்கள் மற்றும் அது தொடர்பாக கீழுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திட்டங்களுக்கான செயலாற்று ∴ முன்னேற்ற அறிக்கையில் திட்ட ஆரம்ப மற்றும் முடிவு திகதிகளை காட்டப்படாமையினால் வீடொன்றினை நிர்மாணிப்பதற்காக 8 மாதத்திற்கான திட்டமிடப்பட்ட காலத்தினை விஞ்சிய திட்ட தாமதத்தினை இனங்காண முடியாமை மற்றும் தாமதம் தொடர்பாக சட்ட ஒழுங்குகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்காதிருந்தமைக்கான தகவல்களை கண்டு பிடிக்க முடியாதுபோய் இருந்தது. | சரியாக தகவல்களுக்கு வருடாந்த செயலாற்று அறிக்கையினை தயாரிப்பதற்கு,பிரிவு களுக்கிடையே தகவல்களை காலத்திற்குக் காலம் பரிமாறிக் கொள்வதற்கும் தேவையான முறைமை மற்றும் கட்டுப்பாட்டு விதிகளை அமைத்துக் கொள்ளப்பட வேண்டியமை. | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2019 வருட முன்னேற்ற அறிக்கையின் படி 2019 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் 4920 தொடர் வீடுகளில் 2019 திசெம்பர் 31 அந் திகதி ஆகும் போது முடிக்கப்பட்டுள்ள வீடுகளின் | சரியான தகவல்களுக்கு அமைய வருடாந்த செயலாற்று அறிக்கையினை தயாரிப்பதற்கு பிரிவுகளுக்கிடையே | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | எண்ணிக்கை 2059 ஆகும். நிர்மாணப் பணிகள் 8 மாதத்தினுள் முடிக்கப்பட வேண்டி இருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு ஒரு வருடம் விஞ்சப்பட்டு 2861 முடிக்கப்படாத விடுகள் இருந்தன. ஆயினும், அவ் அறிக்கையினை மேற்கொண்டு பரீட்சிக்கையில் பசுமை பொன் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் 2018 ஆம் வருடம் இரத்தினபுரி 1 ஆம் கட்டத்தின் கீழ் பெட்றிக் தோட்டத்தில் உத்தேச வீடுகளின் எண்ணிக்கை 15 ஆக காட்டப்பட்டு இருந்த போதிலும், உண்மையில் அவை 30 ஆக இருக்க வேண்டியதுடன் 2016 ஆம் வருடம் ஆரம்பிக்கப்பட்ட 2019 ஆம் வருடத்திற்கு முன் கொண்டுவரப்பட்டு முடிக்கப்படாத வீமுகளின் எண்ணிக்கை, அறிக்கையின் படி 760 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும், உண்மையான மதிப்பீடு 1104 ஆக இருக்க வேண்டுமென அவதானத்திற்குள்ளானது. அதன்படி நிர்மாணிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ள வீடுகள் தொடர்பான தகவல்கள் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு இல்லாமை அவதானிக்கப்பட்டது. | தகவல்களை காலத்திற்கு காலம் பரிமாறிக் கொணவதற்கும் தேவையான முறைமை மற்றும் கட்டுப்பாட்டு விதிகளை அமைத்துக் கொள்ளப்பட வேண்டியமை. | |
| (இ) | கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்ட முன்னேற்ற அறிக்கைகளில் படிவம், விடயப் பொறுப்புக்கான ஒவ்வொரு உத்தியோகத்தருக்கும் அமைவாக வித்தியாசப் பட்டதுடன் ஒருமைப்பாடற்ற படிவங்களின் கீழ் பெற்றுக் | சரியான தகவல்களுக்கு அமைய வருடாந்த செயலாற்று அறிக்கையினை தயாரிப்பதற்கு தேவையான முறைமை மற்றும் கட்டுப்பாட்டு | விடை அளிக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| கொடுத்ததன் மூலம் தகவல்களை சுருக்கப் படுத்தியதனால் கணக்காய்விற்கு முட்டுக்கட்டை ஏற்பட்டது. | விதிகளை அமைத்துக் கொள்ளப் பட வேண்டியமை. | |

## 3.7 வெளிநாட்டு உதவித்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) இந்திய அரசின் உதவியுடனான முதல் உத்தேச 4000 அலகினை கொண்ட வீடமைப்புத் திட்டத்தின் ஆரம்ப செயற்பாடு மேற்பார்வைக்காக மொத்த பெறுமதியின் நூற்றுக்கு 1.5 திட்டத்தின் முன்னேற்றத்திற்கு அமைய அரச ஒதுக்கீட்டிலிருந்து பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. 2019.12.31 ஆந் திகதியாகும் போது 699 வீடுகள் பெறுநர்களிடம் கையளிக்கப்பட்டதாகவும் 1,368 வீடுகளுக்கான உட்கட்டமைப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை எனவும் 265 வீடுகளுக்கான பூமியிலை தெரிவு செய்யப்பட்டோ அல்லது சீராக்கப்பட்டோ இருக்கவில்லையெனவும் உள்ளக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. அதன்படி பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தினைக்கு ரூபா 32,263,200 செலுத்தப்படக் கூடியதாக உள்ளது. | ஏதாவதொரு நிதியினை வழங்களுக்கு பரிந்துரை அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொடுக்கும் மற்றும் வழங்கலை மேற்கொள்ளும் உத்தியோகத்தர் நிதிப் பிரமாணத்தின் படி செயற்பட வேண்டியதுடன் அரசுக்கு நட்டத்தினை ஏற்படுத்தும் படி செய்யப்பட்ட வழங்கல்கள் தொடர்பாக சட்ட ஒழுங்கின் படி செயற்பட வேண்டியமை. | விடை அளிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | ஆயினும், முறையான மேற்பார்வை இல்லாது ரூபா 34,997,000 செலுத்தப்பட்டமையினால் ரூபா 2,733,800 க்கான கூடுதலான செலுத்துதல் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியன்று அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 2019 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்துடனான இந்திய உதவியின் கீழ் 5000 வீடமைப்பு அலகினை நிர்மாணிப்பது தொடர்பானதும் மேலுள்ளது போன்று திட்டத்தின் முன்னேற்றத்திற்கு அமைய அரச ஒதுக்கீடுகளிலிருந்து பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்திற்கு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தினை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. ஆயினும், வீடுகளின் எண்ணிக்கை பற்றிய இணக்கப்பாடு, காணிகளை ஒதுக்கப்பட்டு திட்டங்களை வகுத்துக் கொள்வது ஆகிய அடிப்படை செயற்பாடுகள் வேறு செய்யாது இருக்கும் நிலையில் 2019 நவம்பர் 08 ஆந் திகதி ரூபா 10 மில்லியனுக்கான பொருளாதாரமற்ற வழங்கல் ஒன்றினை பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்திற்கு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | விடை அளிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | இந்திய அரசுடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி 10,000 வீடுகளை நிர்மாணிப்பதற்கு இந்திய அரசுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றினை மேற்கொள்ளும் படி இலக்கம் 10/0296/739/002 மற்றும் 2018 | - மேற்படி - | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | பெப்ரவரி 28 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. அதன்கீழ் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு கொண்டு இருப்பினும் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் 2020 யூலை 09 ஆந் திகதியாகியும் அமைச்சிடம் உரித்தாக இல்லை. | | |
| (ஈ) | 2016 சனவரி 18 ஆந் திகதிய அமைச்சரவை பத்திரத்தில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள அமைச்சரவை அங்கீகாரத்தின் படி இந்திய வீடமைப்பினை ஆரம்பிப்பதற்கு தேவையான ஆரம்ப செயற்பாடுகளுக்காக வலய பெருந்தோட்ட கம்பனி மூலம் ஒரு வீட்டுக்கு தலா ரூபா 30,000 வீதம் ஏற்கும் படியும் வீடமைப்பினை நிர்மாணிக்கப்பட்டதன் பின் வீடமைப்புக்கான தேவையான உட்கட்டமைப்பினை மாத்திரம் அமைச்சின் மூலம் செலவிடப்பட வேண்டி இருந்த போதிலும், தோட்ட காணிகளின் ஆரம்ப அமைப்பு செயற்பாடுகளை பரீட்சித்த மாதிரிகளுக்கு அமைய 3 தோட்டங்களுக்கு ரூபா 355,835 அமைச்சரின் பத்திரத்திற்கு முரணாக அமைச்சினால் வழங்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

**3.8 பெறுகைகள்**

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| | -------------------------------------- | ---------------- | -------------------------------------- |
| (அ) | பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் 2007 இலக்கம் 07 கொண்ட கம்பனி | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையில் | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு தாபிக்கப்பட்ட பிணையால் வரையறுக்கப்பட்ட கம்பனியாகும். அதன்படி எவ்வித ஒழுங்குமுறையோ உடன்படிக்கையோ இன்றி கம்பனியொன்றுக்கு அமைச்சின் நிர்மாணிப்புப் பணிகளை பெற்றுக் கொடுப்பதோ நிதியினை விடுவிப்பதோ அல்லது அமைச்சு சார்பாக உடன்படிக்கைகளை மேற்கொள்வது சட்ட ஒழுங்குகளுக்கு முரணாக இருந்த போதும் இச்செயற்பாமு தொடர்ந்தும் மேற்கொண்டு வருவது அவதானிக்கப்பட்டது. | குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கவனத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட பெறுகைகளை மேற்கொள்ளப்பட வேண்டியமை. | |
| (ஆ) | பெறுகை வழியுறுத்தலின் மற்றும் பெறுகை வழிகாட்டலில் 3.9.4 பந்தியின் பிரகாரம் கூட்டுறவு சங்கங்களுக்கு மொத்தம் ரூபா 2 மில்லியனுக்கு மேற்பட்ட ஒப்பந்தங்கள் கொடுக்கப்படக் கூடாததுடன் ஒரு குறிப்பிட்ட காலத்தினுள் ஒரு சங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய மொத்த ஒப்பந்த எண்ணிக்கை மூன்றுக்கு கூடாமல் இருக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்த போதும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் சகல ஒப்பந்த நிர்மாணப் பணிகளையும் அமைச்சு சார்பாக தோட்ட ஊழியர் வீட்டு கூட்டுறவு சங்கத்துடன் உடன்படிக்கையிட்டு நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளப்படுவதனால் பெறுகை வழிகாட்டலில் காட்டப்பட்டிருக்கும் வரையறையினை விஞ்சி செயற்பட்டிருக்கின்றது. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கவனத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட பெறுகைகளை மேற்கொள்ளப்பட வேண்டியமை | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | அமைச்சினால் ஒதுக்கீடு பெற்றுக் கொடுத்ததன் பின் அவ் ஒதுக்கீட்டின் படி தயாரிக்கப்பட்ட அளவு பத்திரத்திற்கு அமைய (BOQ) நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படும் தோட்ட கம்பனிகளுக்குரிய தோட்ட கூட்டுறவு சங்கங்களுடன் இணைந்து மதிப்பீட்டு பெறுமானத்திற்கு கைத்தொழில்களை முடித்துக் கொடுப்பதற்கு மனிதவள அபிவிருத்தி நிதியம் உடன்படிக்கையினை ஏற்படுத்திக் கொள்ளும் மேற்படி சகல ஒப்பந்தங்களும் தோட்ட கூட்டுறவு சங்கங்கள் மூலம் உப ஒப்பந்தங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாறு உப ஒப்பந்தங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்ட நிறுவனங்களுக்கு கைத்தொழிலினை முடித்துக் கொடுப்பதற்கான திறனினை தொடர்பாக பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் மூலமாக பரிசோதனை செய்யப்படாததுடன் ICTAD நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டிய ஒப்பந்தங்களை, போதியளவு திறமையற்று ஒப்பந்தக்காரர்களால் மற்றும் ஒப்பந்தக்காரராக பதிவு செய்யப்படாத நபர்களால் மேற்கொள்ளப்படுவதாக தள பரிசோதனைகளின் போது வெளியாகின. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கவன்திற் கொண்டு சம்பந்தப்பட்ட பெறுகைகளை மேற்கொள்ளப்பட வேண்டியமை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | வீடமைப்பு திட்டங்களுக்கு மாத்திரம் வருடத்திற்கு ரூபா ஆயிரம் மில்லியனிற்கும் மேற்பட்ட திட்டங்கள், பெறுகைகள் வழிமுறைகளுக்கு புறம்பாக, அதாவது விலைமனு கோரிலினை முறையாக | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கவனத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | தாக்கல் செய்யாமை, விலைமனு காப்புறுதி மற்றும் செயலாற்றுகை காப்புறுதி பெற்றுக் கொள்ளாது ஒப்பந்தக் காரர்களுக்கு பெற்றுக் கொடுத்தல் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவது அவதானிக்கப்பட்டது. | பெறுகைகளை மேற்கொள்ளப்பட வேண்டியமை | |
| (உ) | உப ஒப்பந்தக்காரர்கள் மூலமாக மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிர்மாணப் பணிகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட பற்றுச் சீட்டுக்களுக்காக அமைச்சினால் செலுத்தும் போது காசோலைகளை அவ் ஒப்பந்தக் காரர்களுக்கு எழுதுவதற்குப் பதிலாக மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் பெயருக்கு எழுதுவதன் காரணமாக ஒப்பந்தகாரருக்கு பணம் கிடைப்பது மிகவும் தாமதமாகி உள்ளது. 2018 யூன் 01 ஆந் திகதி முதல் 2019 மே 30 ஆந் திகதி வரையிலான காலத்தினுள் ஹற்றன் மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் மாதிரிகளின் பரிசோதனைப் படி அமைச்சு ஒப்பந்தக்காரர்களுக்காக விடுவிக்கப்பட்ட ரூபா 204.62 மில்லியனில் ஒப்பந்தக் காரர்களுக்கு ரூபா 105.03 மில்லியன் மட்டும் விடுவிக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒப்பந்தக்காரரின் சாத்தியக்கூற்றில் பின்னடைவு ஏற்படுவதுடன் நிர்மாணப் பணிகள் தாமதமாகுதல் உரிய தரத்தில் மேற்கொள்ளாமை போன்றே விடுவிக்கப்படும் போது நிதி தவறான முறையில் பயன்படுத்தப்படுவதனையும் அவதானிக்கப்பட்டது. | ஒப்பந்தக் காரர்களுடன் ஒப்பந்தம் இடப்பட்டு அவர்களிடம் நேரடியாக காசோலைகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் அரச நிதியினை தவறாக பயன்படுத்துவதனை தடுத்துக் கொள்ள முடியும். | விடை அளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | வட்டவல தோட்ட சங்கத்திற்கு உரித்தான ஸ்ரேருடன் பெருந்தோட்டத்தில் புருட்வில் மற்றும் ஸ்ரேருடன் பிரிவுகளில் ஒப்பந்த முறையின் கீழ் 100 வீடுகள் 06 மாதங்களில் செய்து முடிப்பது, நிர்மாணிப்பதற்காக ரூபா 100,000,000 க்கு, 2016 திசெம்பர் 09 ஆந் திகதியன்று தமது வியாபாரத்தினை பதிவு செய்த தனியார் கம்பனி ஒன்றுக்கு , 2016 திசெம்பர் 19 ஆந் திகதி அங்கிருந்த கூட்டுறவு சங்கம் ஒப்பந்தத்தினை கையளித்தது. ஆயினும், ஒப்பந்தத்தினை கையளிக்கும் போது பெறுகை முறையினை பின்பற்றப்பட்டதாக கணக்காய்வின் போது எவ்வித சான்றும் இருக்கவில்லை. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளையும் கவனத்திற்கொண்டு சம்பந்தப்பட்ட பெறுகைகள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (எ) | ஸ்ரேருடன் பெருந்தோட்டத்தில் 100 வீடுகள் ஒப்பந்த முறையின் கீழ் நிர்மாணிப்பதற்காக 2016 திசெம்பர் 19 ஆந் திகதி 06 மாதத்தில் முடித்துக் கொடுப்பதற்கு இணங்கி, ஒப்பந்தமிட்டு பணம் செலுத்துவதற்கு மற்றும் 2017 மார்ச் 1 ஆந் திகதிய அமைச்சரவையின் தீர்மானப்படி ஒரு வீட்டுக்கு ஆகக்கூடியதாக ஒதுக்கப்பட்ட ரூபா 1,000,000 என தீர்மானிக்கப்பட்ட போதிலும், அதற்கு முரணாக அந்த ஒரு வீட்டின் ஒதுக்கீட்டினை பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் வேண்டுகோள் மற்றும் திட்ட பொறியியலாளரின் சான்றுரைக்கு அமைய அமைச்சின் செயலாளரின் அனுமதியுடன் ரூபா 1,030,000 வரை அதிகப்படுத்தி வழங்கப்பட்டிருந்தது. மேற்படி 100 வீடுகளில் 50, 2019 ஆம் | அமைச்சரவை தீர்மானப் படி செயற்பட வேண்டியமை மற்றும் தாமதக் கட்டணம் அறவிடப்பட வேண்டியமை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டு சனவரி 07 ஆந் திகதி முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 2019 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது பொறியியலாளரின் அனுமதியுடன் வழங்கப்பட்டுள்ள பெறுமதி ரூபா 47,065,717 உம் அது தொடர்பாக தடுத்து வைப்புப் பணம் ரூபா 2,214,815 ஆக இருந்தது. ஆயினும், தாமதக் கட்டணம் அறவீடு மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஏ) | 2018 சனவரி 12 ஆந் திகதிய முன்னைய வீடு தொடர்பாக தோட்ட கூட்டுறவு சங்கம் மற்றும் க்லோபல் கொமியுனிட்டி டிவலொப்மன்ட் (தனியார்) கம்பனியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைய 100 வீடுகளையும் விட்டுமுறைக்கு நிர்மாணிக்கப்பட வேண்டிய போதிலும் நிர்மாணிக்கப்பட்டிருந்த 50 வீடுகளும் ஒன்றிணைக்கப்பட்ட அதாவது முன்னைய மற்றும் சாதாரண நிர்மாணமும் சேர்க்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்தன. | ஒப்பந்தத்திற்கு அமைய திட்டங்களை செயல்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3.9 சொத்துக்களுக்கான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| (அ) | சௌமியமூர்த்தி தொண்டமான் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் செயல்பட்ட 2017 ஆம் வருட அமைச்சினால் சுவீகரிக்கப்பட்ட பூல்பேங்க் தொழில்முயற்சி மையம், ரம்பொட கலாசார மையம், நோர்வூட் நிறுவனங்களின் அசையும் மற்றும் அசையா | சொத்துக்களை முறையாக கையேற்கவும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் அறிக்கைகளை தயாரித்து சமர்ப்பிக்கவும் தேவையான | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களின் பொருட்களை ஆய்வு செய்து அச்சொத்துக்களை முறையாக அமைச்சுக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. மேலும், நிதிப்பிரமாணம் 755(1) மற்றும் (2) பிரகாரம் அறிக்கைகளை தயாரித்து சமர்ப்பிப்பதற்கு 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் 27 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. மேற்படி விடயங்கள் காரணமாக 2017 யூன் 28 ஆந் திகதிய இலக்கம் 1/2017 கொண்ட சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் கம்ட்ரோல் ஜனரால் காரியாலயத்திற்கு இவ் நான்கு நிறுவனங்களுக்கும் சொந்தமான சொத்துக்கள் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | முறைமை மற்றும் கட்டுப்பாட்டு விதிமுறைகளை தயாரித்து செயற்படுத்த வேண்டியமை. | |
| (ஆ) | அமைச்சுக் கட்டிடத்தின் தரைத் தளத்தில் அமைந்துள்ள பால் நிலையத்துடன் கூடிய கட்டிடத்தை அமைச்சின் நலன்புரி சங்கத்தால் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு வெளித்தரப்பு ஒன்றுக்கு குத்தகைக்கு விடப்பட்டு இருந்ததுடன் பால் நிலையத்தின் மின்சாரம் மற்றும் நீருக்கான செலவு மற்றும் வாடகையை அமைச்சுக்கு அறவிடப்பட்டு அரச வருமானத்திற்கு வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | சொத்துக்களை வேறு நிறுவனங்களுக்கு கையளிக்கும் போது அமைச்சின் குறிக்கோள்களை மேற்கொள்வதற்கு இடையூறு விளைவிக்காத சொத்துக்களை மாத்திரம் முறையாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதி நடந்த பொருட் கணிப்பு அறிக்கையின் படி மற்றும் நிதிப் பிரமாணம் 757(2)(அ) மற்றும் (ஆ) அமைவாக அவைகளின் பற்றாக்குறை மற்றும் மிகை தொடர்பாக | அதை நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பரிந்துரைகள் T மற்றும் A படிவத்தில் குறிப்பிட்டு கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. 111 வகை பொருட்களின் கீழ் 396 ஐட்டங்களின் பற்றாக்குறை மற்றும் 106 ஐட்டங்களின் மிகையும் காணாமற் போன பொருட்கள் தொடர்பாக சேத மற்றும் நட்டப் பட்டியலில் உட்படுத்தி நிதிப்பிரமாணம் 103(1) இன் படி நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் 2019 நிதிக்கூற்றின் இலக்கம் (ii) இன் கீழ் உட்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.10 நட்டங்களும் சேதங்களும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கொட்டியாகல தோட்டத்தில் உத்தேச 184 வீடுகளில் 42 மட்டும் முடிக்கப்பட்டுள்ளதுடன் ஒப்பந்தத்தினை வழங்கப்பட்ட 2016 மே 23ஆந் திகதிக்கு பிறகு அதாவது 2016 யூன் 08 தேசிய கட்டிட பரிசோதனை நிலையத்தின் மண்சரிவு பரிசோதனை மற்றும் இடர் முகாமைத்துவ பிரிவின் மூலமாக சம்பந்தப்பட்ட அறிக்கையினை பெற்றுக் கொள்ளப்பட்டு அப்பரிந்துரைகளுக்கு ஏற்ப கவனம் செலுத்தாமையினால் நேர்ந்துள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி அந்த 42 வீட்டுப் பெறுநர்களும் அவைகளை ஏற்க மறுத்துள்ளனர். ஆயினும், அதற்காக | முற்பணம் வழங்கும் போது முறையான மேற்பார்வைக்கு பின்னர் அரச பெறுஜக வழிகாட்டல் கோவையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நிதியினை விடுவிக்கப்பட வேண்டியமை மற்றும் இழப்பினை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | இந்த திட்டத்தில் 184 வீடுகளை திட்டமிடப்பட்ட போதிலும், இடத்தின் சுற்று சூழலின் பிரச்சினை கருதி 42 வீடுகள் மட்டும் செய்து முடிக்க நேர்ந்தன. அதிக செலவு காரணமாக அவர் வேலைத்தளத்தை கைவிட்டு சென்று விட்டார். இது பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டதுடன் அவருக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்கு இக்டாட் நிறுவனத்தினை அறிவுறுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையான ரூபா 26,830,910 விஞ்சி 2018 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது ஒப்பந்தக்காரர்களுக்கு ரூபா 40,443,527 வழங்கப்பட்டு உள்ளமையினால் ரூபா 13,612,617 மேலதிகமாக வழங்கப்பட்டிருந்தது. | | இந் நிறுவனம் மேலதிகமாக செய்த வேலைகளுக்காக பற்றுச்சீட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருக்க வில்லை. ஆகையினால் இங்கு காணும் பணம் மேலதிகமாக வழங்கப்பட்ட பணமாக குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ஆ) | மேற்குறிப்பிடப்பட்ட 42 வீடுகளையும் பெறுநர்கள் சுட்டிக் காட்டிய குறைபாடுகளை நிவர்தி செய்வதற்கு 2018 செப்தெம்பர் 10 ஆந் திகதி வேறொரு நிறுவனமான பெறண்டினா நிறுவனத்துடன் 2018 நவம்பர் 15 ஆந் திகதிக்கு முன்னர் வேலைகளை முடிப்பதற்கு வெளிப்படைத் தன்மை மற்றும் பெறுகை நடவடிக்கை இன்றி ரூபா 7 மில்லியனுக்கான ஒப்பந்தம் ஒன்றுக்கு உடன்பட்டு 2019 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 6.84 மில்லியன் வழங்கப்பட்டு இருந்தது. அங்கீகரிக்கப்பட்ட ஒதுக்கீடுகளையும் விஞ்சி மேற்கொள்ளப்படும் இச் செலவுகளும் மேற்படி நிதியினைக்கு மேலதிகமாக அரசுக்கு இழப்பினை ஏற்படுத்தி உள்ளது. | அரசினது பெறுகை வழிகாட்டல் கோவையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக மற்றும் அரசுக்கு நட்டத்தினை ஏற்படுத்தாத வகையில் ஒப்பந்தங்களை செயற்படுத்த வேண்டியமை. | குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரை வீடுகளில் குடிபோக முடியாதென வீட்டுப் பெறுநர்கள் அறிவித்துள்ளனர். வேலைகள் யாவும் நிறுத்தப்பட்டு இருந்தமை வீடுகளுக்கு சேதம் விளைவிக்கப்பட்டு இருந்தபடியால் அதற்காக மதிப்பீடு தயாரித்து டெண்டர் மேற்கொள்வதற்கு காலம் போவதால் அமைச்சில் வேறு திட்டங்கள் மேற்கொள்ளும் பெதெண்டியா நிறுவனத்திற்கே ஒப்படைப்பதற்கு PHDT க்கு வழங்கும் நூற்றுக்கு 7 முகாமைத்துவ கட்டணத்தினை அவர்களுக்கு வழங்குவதற்கு உடன்பட்டது. |
| (இ) | பிட்டரத்மலே நுழைவாயில் பௌதீக பரிசோதனையில் மேற்பரப்பில் மண் வெட்டுதல் மற்றும் பரப்புதல் பாதையின் மேற்பரப்பில் பொலித்தீன் விரித்தல் ஷட்டரினுக்காக மற்றும் கொங்கிறீட் இடுதலுக்காகவும் முறையே ரூபா 20,037, ரூபா 9,945, ரூபா 9,945 மற்றும் ரூபா | - மேற்படி - | PHDT விடையின் படி ஒப்பந்தக்காரர் தவறினை ஏற்று திருத்தப்பட்டமையினை தெரிவித்து இருக்கின்றார். தரத்திற்கான நிர்மாணிப்பு இல்லாமையினாலும் |

| | | | |
|---|---|---|---|
| | 650,335 ஆகியவாறு மொத்தம் ரூபா 690,262 மேலதிகம் வழங்கப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | | முகாமைத்துவ கட்டணத்திலிருந்து 4% அதாவது ரூபா 27,251 கழிப்பதற்கு பரிந்துரைக்கப்பட்டது. |
| (ஈ) | அம்பிட்டி கந்த வீடமைப்பு திட்டம் தொடர்பாக பக்கவாட்டு மதிலினை நிர்மாணிப்பது தொடர்பாக பக்கவாட்டு மதிலின் அடியில் இடப்பட்டுள்ள 1.3.6 கொங்கிறீட் கலவைக்காக கனமீட்டர் 74.4 க்காக ரூபா 1,227,600 வழங்கப்பட்டிருந்தது. ஆயினும், பௌதீக பரிசோதனையின் படி செய்து முடிக்கப்பட்டுள்ள அளவினை கனமீட்டர் 66.249 ஆவதனால் அதன்படி ரூபா 126,241 மேலதிகமாக வழங்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | இதுவும் மேற்பார்வையில் ஏற்பட்ட குறைவினால் உருவானபடியால் வழங்குவதற்கு பரிந்துரைத்த மொத்த தொகை ரூபா 5,570,461 முகாமைத்துவ கட்டணமான 4% தொகையில் 50 சதவீதம் கழித்துக் கொள்வதற்கு பரிந்ரைக்கப்படுகின்றது. ஆதன் படி கழிக்கப்படும் தொகை ரூபா 111,408 ஆகும். |
| (உ) | KB-9614 இலக்க வாகனத்திற்கு 2017 பெப்ரவரி மாதத்தில் ஏற்பட்ட விபத்தில் அரசுக்கு ஏற்பட்ட ரூபா 272,276 க்கான இழப்பில் ரூபா 89,759 தற்காலிக அடிப்படையில் இருந்த சாரதியிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அச்சாரதி சேவையிலிருந்து விலகி இருந்தமையினால் இதுவரை அறவிடப்பட்டு இருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 113(4) பிரகாரம் அறவிடப்படுவதற்கு அல்லது தள்ளுபடி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஊ) | 2016 ஆகஸ்ட் மாதம் ஒதுக்கிய வாகனம் ஒன்றுக்கு ஏற்பட்ட விபத்தில் மூன்றாம் தரப்பு காப்பீடு மாத்திரம் செய்யப்பட்டு இருந்தமையினால் அதனை திருத்துவதற்கு ரூபா 1,032,130 செலவு செய்யப்பட்டிருந்தது. 2018 ஒக்டோபர் 25 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 104(4) அறிக்கையில் விபத்துக்கு | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் முன் வைக்கப்பட்டுள்ள பரிந்துரையினை செயற்படுத்த வேண்டியமை. | நி.பி 104(4) கீழ் மேற்கொள்ளப்பட்ட பரீட்சையில் இறுதி அறிக்கையில் உள்ளடங்கிய வாகனத்திற்கு ஏற்பட்ட இழப்பினை பணிப்பாளர் அதிபதி மற்றும் சாரதி இருவருடமிருந்தும் அறவிடப்படும் படி உத்தரவுப்பட்டு இருப்பதுடன் இவ் |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து திருத்த வேலைக்கான செலவினை அறவிடுவதற்கு பரிந்துரைக்கப்பட்ட போதிலும், 2020 ஆகஸ்ட் 30 ஆந் திகதி வரைக்கும் எவ்வித தொகையும் அறவிடப்பட்டு இருக்கவில்லை. | | இருவரும் வேலையிலிருந்து ராஜினாமா செய்து உள்ளனர். அதன் பிரகாரம் தனியார் கோப்பு உதவியுடன் தகவல்களை கொண்டு தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

**3.11 கணக்காய்வு விசாரணைகளுக்கு விடை பெற்றுத்தராமை**

நிலுவையில் உள்ள கணக்காய்வு விசாரணை பற்றிய தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் உள்ளகக் கணக்காய்வு பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 31 விசாரணைகளில் 17 கணக்காய்வு விசாரணைகளுக்காக விடைகளை பெறுவதற்கு 01 மாதம் முதல் 08 மாதம் வரையிலும் 06 விசாரணைகளுக்காக விடைகளை பெறுவதற்கு 02 கிழமை முதல் 03 கிழமை வரையிலுமான காலம் எடுக்கப்பட்டிருந்தது. மீதி 08 விசாரணைகளுக்காக 2020 ஆகஸ்ட் மாதம் 30 ஆந் திகதி ஆகும் போது 09 மாதம் முதல் 19 மாதங்கள் இடைப்பட்ட காலம் சென்று இருந்தும் விடை பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு விசாணைகளுக்கு உரிய காலத்தினுள் விடைகள் முன் வைக்கப்பட்டு அத்தவறுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) | தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் மூலம் 2019 ஆம் ஆண்டு தொடர்பாக வெளியிடப்பட்ட 13 கணக்காய்வு விசாரணைகளுள் 04 கணக்காய்வு விசாரணைகளுக்கான | - மேற்படி - | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

விடையினை பெறுவதற்கு 02 கிழமை முதல் 04 மாதம் வரையிலும், 05 கணக்காய்வு விசாரணைகளுக்கு அமைச்சிலிருந்து 2020 செப்தெம்பர் 17 ஆந் திகதியாகும் போது 1½ மாதம் முதல் 07 மாதம் வரையிலான காலம் கழித்தும் விடைபெறப்படவில்லை.

**3.12 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தோட்ட தொழிலாளர் பிரஜைகளுக்கான காணி உரிமையினை மற்றும் பொருத்தமான வீட்டு வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்காக 2016 திசெம்பர் 06 ஆந் திகதிய வரைவினை அமைச்சரவை தீர்மானம் மூலம் மற்றும் 2017 ஒக்தோபர் 27 ஆந் திகதிய மற்றும் இலக்கம் அமப/17/2281/739/001-III கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் படி அத்திகதிக்குப் பிறகு இவ்வாறான வீட்டு ஒப்பந்த நிர்மாணப் பணிகளுக்காக காணிகளை தெரிவு செய்யும் போது பயிர்ச்செய்கை இல்லாத காணிகளை தெரிவு செய்வது உசிதம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இருந்த போதிலும் கூட 2019 நவம்பர் 25 முதல் 29 வரையில் மேற்கொள்ளப்பட்ட தள பரிசோதனை மாதிரிக்கு அமைய ஹற்றன், நுவரெலியா மற்றும் பதுளை பிரதேசங்களில் தேயிலை பயிர்ச்செய்கை | அமைச்சரவை தீர்மானப் படி செயற்பட வேண்டியமை. | வீடமைப்புத் திட்டங்களுக்காக உபயோகமுள்ள தேயிலைத் தோட்டங்களை பயன்படுத்தப்பட்டு இருப்பதாக கணக்காய்வின் போது குறிப்பிடப்பட்டுள்ள விடயம் மிக்க உண்மையானதாகும். இப்புது வீடமைப்பு செயல் திட்டத்தினை உருவாக்கி இருப்பது தற்போது உள்ள மிகப் பழமைவாய்ந்த தொடர் வீடுகளை உடைத்து அப்புறப்படுத்தி அப்பிரதேசத்தில் இடர் முகாமைத்துவம் அற்ற வீடமைப்பு முறைமை ஒன்றினை ஏற்படுத்துவதற்கு ஆகும். ஆயினும், தற்போது நடப்பது, அந்த லைன் அதை வீடுகளை அப்படி வைக்கவிட்டு வேறு இடங்களிலுள்ள தேயிலைச் செடிகளை பிடுங்கி விட்டு வீடுகளை |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்த பயனுள்ள காணிகள் வெறும் பூமியாக சேர்க்கப்பட்டு கிட்டத்தட்ட 73.1 ஏக்கர் தேயிலைச் செடியினை பிடுங்கி அப்புறப்படுத்தப்பட்டிருந்தது. | | நிர்மாணிப்பதாகும். இது இந்திய வீடமைப்பு செயல்திட்டத்தில் முக்கிய பிரச்சினையாகி உள்ளதுடன் அதிகமானவர்கள் வீடுகளை பெயரளவில் நடாத்திச் செல்வதுடன் பழைய வீடுகளில் வசிக்க்ன்றனர். |
| (ஆ) | 2009 முதல் 2014 வரையில் வெளியிடப்பட்ட தோட்ட வீடமைப்பு நிர்மாணத் திட்டத்தினை செயல்படுத்தும் வழிகாட்டல் கோவையின் படி காணப்படும் தொடர் வீடுகளை அல்லது தற்காலிக குடில்கள் போன்றவற்றினை மீண்டும் ஒப்படைக்கும் படியான இணக்கத்துடன் புது வீடுகளை கையளிக்கப்பட வேண்டும். 2019 நவம்பர் 25 ஆந் திகதி முதற்கொண்டு 30 ஆந் திகதி வரையிலும் கணக்காய்வு மூலம் நுவரெலியா மாவட்டத்தினுள் மேற்கொள்ளப்பட்ட கள பரிசோதனையில் வீட்டு பயனாளிகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட 17 தோட்டங்களில் 22 பிரிவுகளில் காணப்பட்ட 491 வீடுகளில் 15 தோட்டங்களில் 20 பிரிவுகள் சம்பந்தப்பட்ட பழம் தொடர் வீடுகளை அப்புறப்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அதன்படி அப்பழம் வீடுகளிலிருந்து வெளியேறாமல் இருந்ததன் காரணமாக அக்காணிகள் வேறு அலுவலகர்களுக்கு பயன்படுத்தாது அப்பயனாளிகளின் குடும்பத்தினர்களாலேயே தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டிருந்தது. | - மேற்படி - | பழமைவாய்ந்த தொடர் வீடுகளை உடைத்து அப்புறப்படுத்தி அப்பிரதேசத்தில் வீடமைப்பு முறைமை ஒன்றினை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2015 ஏப்ரல் 08 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தில் காட்டப்பட்டுள்ள செய்யப்பட்ட லைன் அறைகளை மீண்டும் ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் மற்றும் வீடுகளுக்கான கடனினை முழுமையாக அறவிடப்பட்டதன் பின்பு வீடுகளுக்கான உறுதிகளை பெற்றுக்கொடுக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செய்யாது நுவரெலியா பிரதேசத்தில் 2016 முதல் 2017 வரையில் கடன் மற்றும் உதவி அடிப்படையின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்ட 240 வீடுகள் தொடர்பாக 2019 நவம்பர் 25 முதல் 29 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட தள பரிசோதனையில் 116 வீடுகளுக்காக அதன் பயனாளிகளுக்கு காணிகளுக்காக உறுதி வழங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | அமைச்சரவை தீர்மானப் படி செயற்பட வேண்டியமை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | “நவஜீவன்” தோட்ட வீடமைப்பு வேலைத்திட்டத்தினை பற்றிய 2009 வருடம் தொடர்பான வழிகாட்டலில் இலக்கம் 7.2 இன் கீழ் பயனாளிகளை தெரிவு செய்யும் போது பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் மற்றும் தோட்ட வீடமைப்பு கூட்டுறவு சங்கத்தின் பங்களிபில் குழுவொன்றின் மூலம் 07 தெரிவுகளை அடிப்படையாகக் கொள்ளப்பட்டு மேற்கொள்ள வேண்டிய போதிலும், பயனாளிகளை தேர்ந்தெடுக்கும் போது அவ்வாறான குழுவொன்றினை நியமித்து மேற்கொள்ளப்பட்ட தாகவோ பயனாளிகளை தெரிவு செய்வதனை சரியாக மேற்கொள்ளப்படுவதாக அமைச்சினால் | பயனாளிகளை தெரிவு செய்யும் போது பின்பற்றுதல் மற்றும் பெருந்தோட்ட பிரஜை தொடர்பு சாதன வசதிகள் பெற்றுக் கொடுப்பதன் மூலம் உத்தியோகத்தர் களை ஈடுபடுத்தி அவர்களை முறையாக அறிவுறுத்தப்பட வேண்டியமை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | கண்காணிக்கப்பட்டோ இருக்க இல்லாததுடன் அது தொடர்பாக மேற்கொண்டு பரீட்சிப்பதற்கு பயனாளிகளின் பட்டியலை தவிர வேறு எழுத்து மூல சான்று கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | பயனாளிகள் தொடர்பாக வீடமைப்பு திட்டத்திற்கான வழிகாட்டலின் படி வீட்டு பயனாளிகளை தெரிவு செய்யும் போது தோட்டத்தில் பதிவான ஊழியராக இருப்பது கட்டாயமாக இருக்க வேண்டியது என்பதனை காட்டப்பட்டிருப்பதுடன் அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் வீடுகளை பெற்றுக்கொடுக்கும் போது மண்சரிவு அபாயத்திற்கு முகங்கொடுக்க மற்றும் ஆபத்தான பிரதேசங்களில் தோட்ட வேலைகளில் ஈடுபடும் குடும்பங்களில் உள்ளவர்களுக்கு உதவியாக மற்றும் ஏனைய தோட்டங்களில் வேலை செய்யும் குடும்பங்களுக்காக கடன் மற்றும் உதவியினை கலந்த அடிப்படையில் பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்படுகின்றது. அது செயல்படுவதாயினும் 2019 நவம்பர் 25 முதல் 29 திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கள பரிசோதனையில் அத்தெரிவினை மீறப்பட்டு வீடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. அதாவது ஹற்றன் மற்றும் நுவரெலியா வலயத்தில் பரீட்சிக்கப்பட்ட 986 வீடுகளில் முறையே 14 வீடுகளை தோட்டத்தில் வேலை செய்யாதவர்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டு இருப்பது அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | வீடமைப்பினை நிர்மாணிப்பது சம்பந்தப்பட்ட வழிகாட்டலுக்கு அமைய வீடுகளை நிர்மாணிப்பதற்கு ஆரம்பிக்கமுன்னர் பயனாளிகளை இனங்கண்டு பட்டியல் தயாரிக்கப்பட்டு வீட்டு நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்க வேண்டி இருந்தபோதிலும், ஸ்டெதரன் பெருந்தோட்டத்தில் ஸ்ரேதடன் பிரிவில் திட்டத்தினை நிர்மாணிப்பது தொடர்பாக 2016 திசெம்பர் 21 ஆந் திகதி ஒப்பந்தக்காரருடன் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் கணக்காய்வு செய்யப்பட்ட திகதியாகிய 2019 நவம்பர் 30 ஆந் திகதி வரையிலும் இந்த 50 வீடுகளுக்கான பயனாளிகளை இனங்காணப்பட்டு இருக்கவில்லை. | திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு முன்பு பயனாளிகளை இனங்கண்டு கொள்ள வேண்டியமை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (எ) | தேவையினை அடிப்படையாகக் கொண்டு பயனாளிகளை தெரிவு செய்யும் முறையில் காணப்பட்ட சிக்கல் காரணமாக 2019 நவம்பர் 25 முதல் 29 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்பட்ட கள பரீட்சையில் நுவரெலியா பிரதேச கணக்காய்வு மாதிரிகளின் படி ரூபா 2,300,000 பெறுமதியான 03 விடுகளை பெற்றுக் கொடுக்கப்பட்ட பயனாளிகளால் அவைகளை பயன்படுத்தப்படாது வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு விடப்பட்டு இருந்தமையும் அதன்படி தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இவ்வீடுகள் அவசியம் இல்லாதமையும் அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | வீடமைப்பு திட்டத்தின் ஆரம்பம் முதற்கொண்டு வீட்டு நிர்மாணப் பணிகளை பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுவதுடன் பசுமை பொன் வீடமைப்பு திட்டத்திற்காக 6 சதவீதம் முகாமைத்துவக் கட்டணம் வழங்கப்படுகின்றது. அதன்படி 2018 ஆம் ஆண்டினுள் ரூபா 45,781,306 உம் 2019 ஆம் வருடத்தினுள் ரூபா 53,650,870 உம் வழங்கப்பட்டு இருந்தது. ஆயினும், முகாமைத்துவக் கட்டணம் செலுத்துவதற்கு பெற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகாரம் இல்லாதிருந்ததுடன் திட்ட மேற்பார்வைக்கு அல்லது முகாமைத்துவ கட்டணம் செலுத்துவதற்கு பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிதியம் அல்லது பெருந்தோட்ட கூட்டுறவு சங்கத்துடன் ஒப்பந்தமாவது இருக்கவில்லை. | அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையில் உள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒப்பந்தங்களை செயற்படுத்த வேண்டியமை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஐ) | 2017 பெப்ரவரி 21 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி ரூபா 1,000,000 ஆன வீட்டின் பெறுமதியில் ரூபா 480,000 சன்மானமாகவும் ரூபா 520,000 கடனாகவும் பெற்றுக் கொடுப்பதற்கு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆயினும், அதற்காக அமைச்சினது ஆலோசனையாக முன்வைக்கப்பட்டள்ள வழிகாட்டல் கையேட்டின் படி நூற்றுக்கு 4 வட்டி வீதத்தின் கீழ் ரூபா 494,000 கடனாகவும் மற்றும் ரூபா 506,000 உதவியாகவும் அமைச்சரவையின் தீர்மானத்திற்கு முரணாக ஆலோசனை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | அமைச்சின் தீர்மானத்தின் படி ஆலோசனை வழங்கப்படல் வேண்டும். | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | மேலும், மீண்டும் கடனினை எத்தினத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு செலுத்தப்பட வேண்டும் என்பதனை அதில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை. | | |
| (ஒ) | நுவரெலியா வலயத்தில் நிர்மாணிக்கப்பட்ட 235 வீடுகளின் மாதிரி பரிசோதனையின் படி செலவிடப்பட்ட கிரயத்தில் ஒரு பகுதி கடன் அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்பட்டதாக பயனாளிகளால் கைச்சாத்திடப்பட்டுள் பத்திரமொன்று இருக்கின்ற போதிலும், செல்லுபடியாகும் ஒப்பந்தம் எதுவும் கைச்சாத்திடப்பட்டு இருக்காமையினால் ஒப்பந்த திகதி, கடனுக்கான நிபந்தனைகள் ஆகியன அதில்உட்பட்டு இருக்கவில்லை. பத்திரத்தில் 5.03 பந்தியின் கீழ் எதிர்காலத்தில் எடுக்கப்படும் தீர்மானப்படி கடன் அறவிடப்படும் என்பதனை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கடன் பணத்தை அறவிடுவதற்கு அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய தேவையான எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடன் அறவிடப் படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஓ) | மாதாந்த தவணைப் பணம் தலா ரூபா 3,800 படி 180 தவணைகளில் கடன் பணத்தினை மீள அறவிடப்பட வேண்டியதாக குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், சம்பந்தப்பட்ட வழிகாட்டலுக்கு அமைய கடன் அறவிடுவதற்கான வழிமுறை மற்றும் அதற்குப் பொறுப்பான அதிகாரிகள் பற்றிய காட்டப்பட்டு இருக்காததுடன் சம்பந்தப்பட்ட கடன் பெறுநர் மற்றும் | நிலுவைக் கடன் மீதிகளை இனங்கண்டு கொள்வதற்கு பொருத்தமான வகையில் ஏடுகள் பராமரிக்க வேண்டியமை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சுக்கு இடையிலான ஒப்பந்தம் இருக்காமையினால் அக்கடன் பணத்தினை மீள் அறவிடுவது பிரச்சினைக்குரியதாக இருந்தது. மேலும் இதுவரையிலும் கடன் பெறுநர்களிடமிருந்து எவ்வளவு பணம் அறவிடப்பட்டு எவ்வளவு கடன் பணம் அறவிடப்பட வேண்டி இருக்கின்றது என்பதனை இனங்கண்டு கொள்ளக் கூடியதான தகவல்களை பராமரிப்பதற்கு மற்றும் கணக்கினை பதிவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | | |
| (ஔ) | அமைச்சு வெளியிட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் வீடுகளை நிர்மாணிப்பதற்கான கடன்களுக்கு 4% வட்டி வசூலிக்கப்படுகின்ற போதிலும், ஆனால் அந்த வருமானத்தை மீட்டெடுப்பது அல்லது வருடத்தில் பெறப்பட்ட கடன் வட்டி வருமானம் அல்லது பெறத்தக்க கடன் வட்டி குறித்து எந்த தகவல்களும் புத்தகங்களில் இல்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் புத்தகங்கள் பேணப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 4. பேண்தகு அபிவிருத்தி குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பேண்தகு குறிக்கோள்களுக்கு அமைவாக தொடர் வீடுகளில் வாழும் பெருந்தோட்ட பிரஜைகளுக்கு 2020 வருட இறுதியில் குடிநீர் வசதிகள், மின்சாரம் மற்றும் நுழைவாயிலுடனான தமக்கென உரித்தான 07 பர்ச்ர்ஸ் காணியுடன் 3234 | 2020 ஆம் ஆண்டு முடிவடையும் போது பேண்தகு அபிவிருத்தி குறிக்கோள்களுக்கு அமைய உத்தேச இலக்கினை அடைந்து கொள்ளக் | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | வீட்டு அலகினை சொந்தமாக பெற்றுக் கொடுக்கும் நடைமுறைத் திட்டம் அதனுள் இருந்தது. 2019 திசெம்பர் 31 ஆந் திகதி ஆகும் போது. 2059 வீட்டு அலகுகளை நிர்மாணித்து முடிக்கப்பட்டிருந்த போதிலும், நிர்மாணிக்கப்பட்ட வீடுகளும் தகுந்த தரத்தில் இருக்காமையினால் ஹற்றன் மற்றும் நுவரெலியா பிரதேசங்களில் இருக்காமையினால் ஹற்றன் மற்றும் நுவரெலியா பிரதேசங்களில் பரிசோதிக்கப்பட்ட மாதிரிகளுக்கு அமைய மாத்திரம் 281 வீடுகளை பயனாளிகள் பொறுப்பேற்க அல்லது குடிபோக ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கவில்லை. | கூடியதாக செயற்பட வேண்டியமை. | |
| (ஆ) | காணியின் பூமி அமைப்புக்கு ஏற்றவாறு தேசிய கட்டிட பரிசோதனை நிறுவனத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த NBRO அறிக்கைகளின் படி மற்றும் திட்டத்தின் படி பூமியின் அளவு மற்றும் அதன்நிலவரத்தினை கவனத்திற் கொண்டு பொருத்தமான முறையில் வீடுகளை திட்டமிடுவதற்கு அல்லது பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பதற்கு செயற்படாமையினால் குடியிருப்பாளர்களை பாதிக்கும் அபாயம் மற்றும் அவ் வீடுகளை கருகிய காலத்தில் பாவனை செய்ய முடியாத நிலவரம் ஏற்படுவதனால் நிர்மாணிப்பதற்கு செய்யப்பட்ட கிரயத்தின் உற்பத்தித் திறனில் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோளினை அடைய முடியாது இருந்தது. | மக்களின் பாதுகாப்பினைக்கு முதலிடம் பெற்றுக் கொடுக்கவும் மக்கள் நிதியினை ஆகக்கூடிய உற்பத்தி திறனுடன் செலவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |

5. **நல்லாட்சி**

5.1 **பொதுமக்களுக்கான சேவைகளை நிறைவேற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பொது மக்களின் புகார்களை ஏற்றுக் கொள்வதற்காக வலைத்தளம் ஒன்று உருவாக்கப்பட்டிருந்த போதிலும், பொது மக்களிடமிருந்து புகார்களை பெற்றுக் கொள்வதற்காக வழிமுறையொன்று மற்றும் புகார்களை பதிவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | பொதுமக்களின் புகார்களை பெற்றுக் கொள்வதற்கான வழிமுறை யொன்றினை தயாரிக்கப்படல் வேண்டும். | விடையளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | அரச மற்றும் தனியார் பெருந்தோட்ட கம்பனிகளில் சேவையாற்றும் காணிகள் அற்ற மக்களுக்காக வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பினை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் புது கிராமங்கள் மற்றும் நகரங்கள் நிர்மாணிப்பதனை அமைச்சினது பொறுப்பாக காட்டப்பட்டிருந்த போதிலும், தேயிலை தோட்டத்திற்குள்ளேயே தற்போதைய தொடர் வீடுகள் அமைந்துள்ள காணிகளிலும் அதற்கு மேலதிகமாக தோட்டத்திலேயே நிலவும் ஏனைய காணிகளிலும் வீடுகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை செய்து கொள்வதின் ஊடாக ஹற்றன், நுவரெலியா கீழ் மாத்திரம், பயிர்ச்செய்கை பண்ணக்கூடிய 1,312 ஏக்கர் நிலம் கைநழுவி போக இருப்பதாக 2019 திசெம்பருக்கான உத்தேச வீடமைப்புத் திட்டத்தின் மூலம் தெரிய வந்துள்ளது. | உத்தேச திட்டங்களை நாட்டிற்கு நலன் ஏற்படும் விதம் செயற்படுத்த வேண்டியமை. | வீடமைப்பு திட்டங்களுக்காக உபயோகமுள்ள தேயிலைத் தோட்டங்களை பயன்படுத்தி இருப்பதாக கணக்காய்வில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயம் மிக்க உண்மையானதாகும். மேலும் இந்த வீடமைப்புத் திட்டத்தினை தயாரித்தது, தற்போதைய மிகவும் பழம் தொடர் வீடுகளை உடைத்து அப்புறப்படுத்தி அப்பிரதேசத்தில் இடர் முகாமைத்துவமற்ற வீடமைப்பு முறைமையொன்று தயாரிப்பதற்காகும். ஆயினும், தற்போது வீடுகள் அவ்வாறே இருக்கையில் வேறு இடங்கள் தேயிலைச் செடிகளை விட்டு வீடுகள் மேற்கொள்ளப் படுகின்றன. இது இந்திய வீடமைப்பு செயற்திட்டத்தின் முக்கிய பிரச்சினையாகி உள்ளது. |

## 6. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட மட்டத்திலான 21 பதவிகளில் 08 வெற்றிடங்களாக இருந்தன. | அமைச்சின் செயலாற்றுகைக்கு பதவிகளின் வெற்றிடங்கள் விசேட தாக்கத்தினை உண்டு பண்ணுவதால் அவைகளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | சம்பந்தப்பட்ட வெற்றிடங்களை நிரப்பும் படி பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பெருந்தோட்ட பிரஜை தொடர்பாடல் வசதிகள் வழங்குவோருக்கு பலதரப்பட்ட திட்டங்களில் தள பரிசோதனை அலுவலகங்களில் உத்தியோகம் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு இருந்த போதிலும் கணக்காய்வினால் 2019 நவம்பர் 25 முதல் 29 வரை மேற்கொள்ளப்பட்ட தள பரிசோதனையில் அவர்கள் அவ் உத்தியோகங்களில் ஈடுபட்டதாக எவ்வித சான்றுகளும் இருக்கவில்லை. அதன்படி அமைச்சினால் சம்பளம் வழங்கப்படும் மற்றும் அமைச்சுக்கு மட்டும் வரையறுக்கப்பட்ட பதவிகளுக்கென சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்கள் பிரதேச செயலகங்கள் மற்றும் நகராட்சி மன்றங்களில் இணைந்து செயற்பட்டிருந்தமை தெரிய வந்துள்ளது. | அமைச்சின் தேவைக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் கள் அமைச்சின் திட்டங்களை விளைத்திறனுடன் நிறைவேற்று வதற்காக ஈடுபடுத்த வேண்டியமை. | விடையளிக்கப்பட்டிருக்க வில்லை. |